**மே – 17**

# TNPSC துளிகள்

- YES வங்கி "வாழ்வாதாரம் மற்றும் நீர் பாதுகாப்பு" எனும் தன்னுடைய பெரு நிறுவன சமூகப் பொறுப்புடைமைத் தொடக்கத்தின் கீழ் ஹரியானா மற்றும் இராஜஸ்தானிலுள்ள விவசாயிகளுக்கான திறன் உருவாக்கத் திட்டத்தை (Capacity Building Project) செயல்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் தேசிய தர நிர்ணய அங்கமான இந்திய தர நிர்ணய ஆணையம் (Bureau of Indian Standards - BIS) டிஜிட்டல் துறையில் உள்ள பிரச்சினைகள் மற்றும் சவால்கள் ஆகியவற்றின் மீது விவாதம் மேற்கொள்வதற்காக புது தில்லியில் டிஜிட்டல் துறையை தரப்படுத்துதல் மீதான CxO மன்றத்தை நடத்தியது.
- சிக்கிம் மாநில அரசு பாலிவுட் பாடகரான மஹித் சவுகானை, சிக்கிமை பசுமைக்கான இடமாக (Destination) தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் ஊக்குவிப்பதற்காக தன்னுடைய பசுமைத் தூதராக நியமித்துள்ளது.
- தற்போது, புதுதில்லியிலுள்ள மத்திய வெளியுறவு அமைச்சகத்தில் இணைச் செயலாளராகப் பணியாற்றி வரும் திரு.முன்மஹாவர் (IFS : 1996) ஓமன் நாட்டிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய அரசின் டிஜிட்டல் இந்தியா தொடக்கத்தை ஒரு படி முன்னெடுத்துச் சென்று முதல்முறையாக விமானிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான (Airmen Recruitment) தேர்வானது ஆன்லைன் மூலமாக நடத்தப்பட்டது.
    - இத்தேர்வானது, மத்திய மின்னணு மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்திய அரசு நிறுவனமான புனேவிலுள்ள மேம்படுத்தப்பட்ட கணக்கீட்டின் மேம்பாட்டிற்கான மையத்தின் (Centre for Development of Advanced Computing - CDAC) கூட்டிணைவோடு விமானப்படையால் நடத்தப்பட்டது. முப்படைகளிலிருந்து ஏதாவதொரு படை, தேர்வுகளை ஆன்லைன் மூலமாக நடத்துவது இதுவே முதல் முறையாகும்.
- அமெரிக்காவின் பெருமைமிகு ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகம், ஜப்பானிய மூளைக்காய்ச்சல் (Japanese Encephalitis - JE) மற்றும் தீவிர மூளைக் குறைப்பாட்டு நோய் (Acute Encephalitis Syndrome - AES) போன்ற நீடித்த நோய்களை தடுப்பதற்கு உத்திரப்பிரதேச மாநிலத்திற்கு உதவிபுரிய ஒப்புக் கொண்டுள்ளது.
- ஐக்கிய பேரரசு பல்கலைக்கழகங்களின் மூன்று இந்திய மாணவர்களான சவுமியா சக்சேனா, ருச்சி ஷா மற்றும் சுஷாந்த் தேசாய் ஆகியோருக்கு முறையே தொழிற்முறை வெற்றி விருது, சமுதாய தாக்கங்களுக்கான விருது மற்றும் தொழில் முனைவோர் விருது வழங்கப்பட்டுள்ளது.
    - இவ்விருதுகள், இங்கிலாந்து நாட்டிற்கு இவர்களுடைய சிறப்பான சாதனைகள் மற்றும் பங்களிப்பு ஆகியவற்றிற்காக பிரிட்டிஷ் கவுன்சிலால் வழங்கப்பட்டுள்ளது.
- Block 5 எனும் மேம்படுத்தப்பட்ட ஃபால்கன் 9 பதிப்பை (Version) சேர்ந்த ராக்கெட்டானது முதல்முறை விண்ணில் செலுத்தப்படவுள்ளது. ஜூன் 2010ல் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் ஸ்பேஸ் எக்ஸ் (Space X) நிறுவனம் இதன் மீதான மேம்பாட்டு செயல்பாடுகளை செய்துவருகிறது.
    - ஃபால்கன் 9 ராக்கெட்டை விட இரு மடங்கு ஆற்றல் வாய்ந்த இந்த Block 5

ராக்கெட்டுகள் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்படும் ராக்கெட் வகையின் கடைசி பதிப்பு ஆகும்.

- இந்திய சுங்கத்துறையும், இந்திய அஞ்சல்துறையும் அஞ்சல் வழியாலான ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளை நெறிப்படுத்துதல் (Streamling) மீது விவாதம் மேற்கொள்வதற்காக புதுதில்லியிலுள்ள விஞ்ஞான்பவனில் முதன்முறையாக கூட்டு மாநாட்டை (Joint Conference) நடத்தின.
- தேசிய அனல் மின் நிறுவனமானது (National Thermal Power Corporation - NTPC) பீகார் மாநிலத்திலுள்ள மின் துறையின் செயல்பாட்டை ஊக்குவிப்பதற்காக பீகார் அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்துள்ளது. இந்த ஒப்பந்தமானது மாநிலத்திலுள்ள மூன்று மின் உற்பத்தி நிலையங்களை NTPCக்கு மாற்றுவதற்கு உதவி புரிகிறது.
    - NTPC ஆனது, மின்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்தியாவிலுள்ள ஏழு மகாரத்னா நிறுவனங்களுள் ஒன்றாகும்.

# தேசியச் செய்திகள்

## பாரத் உள்சேர்ப்பு தொடக்கம்

- ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்கு அகமதாபாத்திலுள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தின் (Indian Institute of Management Ahmedabad- IIMA) புத்தாக்கம், காப்பீடு மற்றும் தொழில்முனைவுத் தன்மை ஆகியவற்றிற்கான மையம், 25 மில்லியன் டாலர்கள் மதிப்பு கொண்ட பாரத் உள்சேர்ப்பு முயற்சியினை (Bharat Inclusion Initiative) தொடங்கியுள்ளது.
- தொழில்முனைவோர்களுக்கு ஆதரவளிக்கவும் வணிகக் கருத்துகளை (Business Ideas) ஏற்புடைய வணிக மாதிரிகளாக (Viable Business Models) மாற்றியமைப்பதற்காகவும் புத்தாக்கம், காப்பீடு மற்றும் தொழில்முனைவுத் தன்மை ஆகியவற்றிற்கான மையம் (Center for Innovation, Incubation and Entrepreneurship - CIIE) அகமதாபாத்திலுள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தில் நிறுவப்பட்டது
- இந்த நிதியானது, ஸ்டார்ட்-அப் நிறுவனங்களிலுள்ள நிதியியல் உள்சேர்ப்பு, வாழ்வாதாரம், கல்வி, வேளாண்மை மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தும்.

## மூன்றாவது மிகப்பெரிய சூரியஒளி சந்தை

- மெர்கோம் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தால் சமீபத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, சீனா மற்றும் அமெரிக்காவிற்குப் பிறகு 2017ஆம் ஆண்டில் உலகின் மூன்றாவது மிகப்பெரிய சூரியஒளி சந்தையாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- மெர்கோம் கம்யூனிகேசன்ஸ் இந்தியா நிறுவனமானது, உலகளாவிய தூய ஆற்றலுக்கான ஆலோசனை நிறுவனமான மெர்கோம் கேபிடல் குழுமத்தின் ஒரு கிளை நிறுவனமாகும்.
- 2010லிருந்து தோராயமாக 170% அளவிற்கு வருடாந்திர கூட்டு வளர்ச்சி விகிதத்தைக் கொண்டு இந்திய சூரியஒளி சந்தை வளர்ச்சியைக் கண்டுள்ளது.

- ❖ இந்த வலுவான வளர்ச்சியானது, 2017 டிசம்பர் வரையில் இந்தியாவின் மொத்த சூரியஒளித் தகடுகளை நிறுவுதல் திறனை (Capacity) 19.6 GW அளவிற்கு உயர்த்தியுள்ளது.


## தேசிய காற்று-சூரியஒளி கலப்புக் கொள்கை

- ❖ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் தேசிய காற்று-சூரியஒளி கலப்புக் கொள்கையை வெளியிட்டுள்ளது. புதிய திட்டங்களை ஊக்குவிப்பது மற்றும் ஏற்கனவே உள்ள திட்டங்களை கலப்பாக்குவது (hybridisation) ஆகியவற்றின் மூலம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை அதிகரிப்பதை இக்கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ மின்சாரத்தை அனுப்புவதற்கான உட்கட்டமைப்பு மற்றும் நிலங்களின் திறனான பயன்பாட்டிற்காக பெரிய மின்கம்பிவடம் இணைக்கப்பட்ட காற்று-சூரியஒளி ஒளி மின்னழுத்த கலப்பு அமைப்பினை (Wind-solar Photo Voltaic hybrid system) ஊக்குவிப்பதற்காக விரிவான கட்டமைப்பை வழங்குவதை இக்கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ மத்திய அரசு, 2022ல் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களிலிருந்து 175 GW மின்சார உற்பத்தியை அடைவதற்கு இலக்கை நிர்ணயித்துள்ளது. இந்த ஆற்றலானது 100 GW சூரியஒளி ஆற்றல் மற்றும் 60 GW காற்று ஆற்றல் திறன்களை உள்ளடக்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## மலேசியப் பிரதமர்

- ❖ திரு.மஹதிர் முகம்மது அவர்கள், மலேசியாவின் ஏழாவது பிரதமராக பதவியேற்றுக் கொண்டார். 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வெற்றி பெற்று இவர் ஆட்சியமைத்துள்ளார்.




- ❖ 92-வது வயதில் மீண்டும் அரசியலுக்கு பிரவேசம் செய்யும் மலேசிய நாட்டு அரசியல் தலைவர் இவர் ஆவார். இதன் மூலம் உலகின் மிக வயதான பிரதமராக

உருவெடுத்துள்ளார்.

- 1957ஆம் ஆண்டு மலேசியா சுதந்திரம் பெற்றதிலிருந்து மலேசியாவை ஆண்டு வரும் பரிசன் நேஷனல் கட்சி 79 இடங்களை பெற்றது. இதற்கு முன்னர் இக்கட்சி 133 இடங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. பரிசன் நேஷனல் கூட்டணியை முகம்மது இவ்வெற்றியின் மூலம் வென்றுள்ளார்.
- மஹதிர் தலைமையிலான எதிர்க்கட்சியான பகாடான் ஹரப்பன், ஒரு சிறிய கூட்டணிக் கட்சியுடன் இணைந்து 121 பாராளுமன்ற இடங்களை வென்றது. மலேசியாவில் அரசமைப்பதற்கு 112 இடங்கள் தேவையாகும்.

## அர்மேனியா பிரதமர்

- அர்மேனியா நாட்டின் பாராளுமன்றம் எதிர்க்கட்சித் தலைவரான நிக்கோல் பஷின்யானை புதிய பிரதமராக தேர்ந்தெடுத்துள்ளது. இதற்கு முன் பிரதமராக இருந்த செர்ஜ் சர்க்ஸ்யான் அரசுக்கு எதிரான நாடு தழுவிய புரட்சியின் காரணமாக ராஜினாமா செய்த இரு வாரங்களுக்குப் பிறகு நிக்கோல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



- நிக்கோல் பஷின்யானுக்கு ஆதரவாக ஐம்பத்தொன்பது வாக்குகளும் அவருக்கு எதிராக 42 வாக்குகளும் பதிவாகின.
- கடந்த மாதம் அர்மேனிய நாடாளுமன்றமானது முன்னாள் குடியரசுத் தலைவரான, ஏற்கனவே 10 ஆண்டுகளாக ஆட்சியிலிருந்து வரும் செர்ஜ் சர்ஜ்ஸ்யானை பிரதமராக காலவரையின்றி நியமித்தது. இதன் காரணமாக நாடு முழுவதும் அரசுக்கெதிரான போராட்டங்கள் வெடித்தன.

## கோஸ்டா ரிக்கா ஜனாதிபதி

- கார்லோஸ் அல்வரடோ கியூஸாடா (வயது 38), கோஸ்டா ரிக்கா ஜனாதிபதியாக நாட்டின் தலைநகரான சான்ஜோஸிலுள்ள குடியரசு சதுக்கத்தில் பதவியேற்றுக் கொண்டார்.



- இவர், பழமைவாத புரோட்டஸ்டன்ட் பாடகரான ஃபேப்ரிகோ அல்வரடோ முனோஜ்-ஐ வெற்றி கொண்டார்.
- இதழியலாரான (Journalist) கார்லோஸ் அல்வரடோ, தன்னுடைய கூட்டணியாளரும், முன்னாள் பிரதமருமான லூயி கில்லர்னோ சோலிஸிடமிருந்து பதவிக்கான நீண்ட அங்கியினைப் (Sash of Office) பெற்றுக் கொண்டார்.
- கார்லோஸ் அல்வரடோ, வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதாகவும், வறுமைக்கெதிராக நடவடிக்கைகள் எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார். 2021 ஆம் ஆண்டானது மத்திய அமெரிக்க நாடான கோஸ்டாரிக்கா சுதந்திரமடைந்த 200-வது ஆண்டாகும்.

# பொருளாதாரச் செய்திகள்


## இந்தியா - குவைத் இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம்

- மத்திய நேரடி வரிகள் வாரியமானது, இந்தியா-குவைத் இடையிலான இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தை (Double Taxation Avoidance Agreement - DTAA) திருத்துவதற்கான நெறிமுறையை வெளியிட்டுள்ளது.
- இரட்டை வரிவிதிப்பை தவிர்ப்பதற்காகவும், வருமானத்தின் மீதான வரிகளைப் பொறுத்து வரி ஏய்ப்பைத் தவிர்ப்பதற்காகவும் இவ்வொப்பந்தம் ஜூன் 2006ல் இரு நாடுகளுக்கிடையே கையெழுத்திடப்பட்டது.
- தற்போதைய DTAA வை திருத்தம் செய்யும் இந்த நெறிமுறையானது மார்ச் 2018 ல் அமலுக்கு வந்தது.
- இந்த திருத்தப்பட்ட ஒப்பந்தமானது, சர்வதேச தரநிலைகளுக்கேற்ப தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக DTAAவின் கூறுகளை மாற்றியமைக்கும் (Updates the provisions).

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## கவோஃபென் - 5

- லாங் மார்ச் 4C ராக்கெட் மூலம் கவாஃபென்-5 விண்கலத்தை சீனா, வடக்கு ஷான்சி மாகாணத்திலுள்ள டெய்யூன் விண்வெளி ஏவு மையத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.



- கவாஃபென்-5 விண்கலமானது வளிமண்டலத்தையும், நாட்டின் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றான காற்று மாசுப்பாட்டையும் விரிவாக கண்காணிக்கும் (Comprehensive Observation) விண்கலமாகும். இதுவே உலகின் முதல் முழுவதும் நிறமாலையிலான உயர் ஸ்பெக்ட்ரல் இமேஜிங் விண்கலமாகும்.
- லாங்மார்ச் ராக்கெட்டின் 274-வது ஏவுத்திட்டமே இந்த கவாஃபென்-5 விண்கலம் ஆகும்.
- இவ்விண்கலம் விரிவான சுற்றுச்சூழல் கண்காணிப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. இந்த விண்கலமானது சீன விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தால் உருவாக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. இவ்விண்கலம் அதன் உயர் உறுதி புவி கண்காணிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஏவப்பட்டது.
- எட்டு ஆண்டு கால வாழ்வுக் காலம் (Life Time) கொண்ட இவ்விண்கலம், சீனாவினால் முதன்முதலாக உருவாக்கப்பட்ட விண்கலமாகும். இது காற்று மாசுபாட்டை கண்காணிக்க பயன்படுகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பசுமை பட்டு மேம்பாட்டுத் திட்டம்

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாட்டு அமைச்சகம் முழு அளவிலான பசுமை பட்டு மேம்பாட்டு திட்டத்தை தொடங்கியுள்ளது.
- நீடித்த பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களின் மேலாண்மை ஆகியவற்றிற்காக 2021ல் 30 வகையான படிப்புகள் வழியாக நாட்டிலுள்ள சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையிலுள்ள 5.5 லட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் அதிகளவிலான தகவல்களை பெறுவதற்கும், பல்வேறு வகையான படிப்புகளுக்கு வின்னப்பிதற்கும் வேண்டி GSDP ENVIS என்ற கைபேசி செயலி தொடங்கப்பட்டுள்ளது. 2017ம் ஆண்டில் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாட்டு அமைச்சகத்தால் தேசிய திறன் மேம்பாட்டு நிறுவனத்துடன் கூட்டிணைந்து சோதனை முயற்சியாக பசுமை பட்டு மேம்பாட்டுத் திட்டமானது துவங்கப்பட்டது.
- இத்திட்டம் தொழில்நுட்ப அறிவு மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பு உணர்வைக் கொண்ட பசுமை திறன்கொண்ட பணியாளர்களை உருவாக்குவதற்காக தொடங்கப்பட்டது.
- இத்திட்டம், தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள், நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள், தேசிய உயிரிபல்வகை இலக்குகள் மற்றும் கழிவு மேலாண்மை விதிகள் 2016 ஆகியவற்றை அடைவதற்கு உதவி புரியும்.

# மாநிலச் செய்திகள்

## உறைந்த விந்தணு நிலையம்

- உறைந்த விந்தணு நிலையங்கள் மத்திய அரசின் 100% பங்களிப்புடன் இராஷ்ட்ரிய கோகுல் திட்டத்தின் கீழ் மராங்கா மற்றும் புர்நியா ஆகிய இடங்களில் நிறுவப்பட்டு கொண்டிருக்கின்றன.
- நடப்பில் செயற்கை விந்தணு செலுத்தலானது, பீகாரிலுள்ள CMOFED (Sudha) ஆல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.



- உறைந்த விந்தணு நிலையம் நிறுவப்படுவதனால், பீகார் மாநிலத்தில் பசுக்கள் மற்றும் எருமைகளின் பால் உற்பத்தி அதிகரிக்கும்.
- புர்னியாவில் உள்ள உறைந்த விந்தணு நிலையமே நாட்டில் விந்தணுவை உற்பத்தி செய்யும் முதல் மையமாக இருக்கும்.
- 2014ம் ஆண்டு டிசம்பர் மாதம், உள்நாட்டு இனங்களை பாதுகாத்து மேம்படுத்தும் நோக்கில் ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் எனும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - -